**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

**O.S. No.**18/2023

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 25.11.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழழகன் | ஜாதி | : | |
| த/பெயர்<br>க/பெயர் | : | பொன்னுசாமி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா. 1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை

**1)** தாவா சொத்து ஆதியில் சீனிவாசன் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு மூன்னதாகவே தாவா சொத்து தொடர்பாக நான் எனக்க சொந்தமானது என்றும் பிரதிவாதி அவருக்கு சொந்தமானது என்றும் சொன்னதான் அடிப்படையில் பிரச்சனை ஏற்பட்டதால் தான்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்து எனக்கு முன்னதாக மல்லிகாவிற்கு சொந்தமானது என்றும் பிரதிவாதி அவரது தாத்தா சீனிவாசன் என்பவருக்கு சொந்தமானது என்றும் சொல்லி வருகிறோம் என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்பாக கடந்த 3 ஆண்டுகளாக எங்களுக்குள் பிரச்சனை இருந்து வருகிறது. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரிதான்.

2) அதில் பட்டா மாறுதல் உத்தரவு 29.10.2021 ல் பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டதாக பக்கம் 11 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பட்டா மாற்றத்திற்கு முன்பு நாகப்பன் மகன் சீனிவாசன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் மாற்றப்பபட்டது என்ற இடத்தில் வாரிசு சான்றிதழ் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் சொத்து சீனிவாசனுக்கு சொந்தமானது என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் தற்போது மாற்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.. (தற்போது சாட்சி வெங்கட்ராம ஐயருக்கு சொந்தமானது என்று கூறுகிறார்).

வெங்கட்ராம ஐயருக்கு சொந்தமானது என்பது ககுறித்து எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தபோது தான் தெரியவந்தது. மல்லிகா எனக்க கிரயம் செய்து கொடுப்பதகற்கு மூன்னதாக வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தேன் என்றால் சரிதான். வெங்கட்ராம ஐயரிடம் சென்று கிரயம் செய்து கொடுக்க கேட்டேனா எ'னாறல் இல்லை. மல்லிகா பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டதால் அவர் மூலம் கிரயம் பெற்றேன். வெங்கட்ராம ஐயர் உயிருடன் இருக்கிறாரா என்பது குறித்து எனக்கு தெரியாது. வெங்கட்ராம ஐயரிடமிருந்து மல்லிகா என்பவருக்கு பட்டா மாற்றம் ஏற்பட்டதால் அவரிடம் கிரயம் பெற்றேன். வெங்கட்ராம ஐயரிடமிருந்து மல்லிகா பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டதற்குண்டான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மல்லிகாவிற்கு பட்டா மாறியது பத்திரத்தின் அடிப்படையில் மாறியதா அல்லது பூர்வீக சொத்தின் அடிப்படையில் மாறியதா எ'ன்றால் கிரய பத்திரத்தின் அடிப்படையில்தான் பட்டா மாறியுள்ளது. எந்த வருடம் எற்பட்ட கிரய பத்திரம் என்பது குறித்து நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அதுகுறித்து மல்லிகா வி'ற்கு தான் தெரியும். எனது தரப்பில் வில்லங்க சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் எனக்கும் தாவா சொத்து தொடர்பாக எந்த வருடம் எந்த தேதியில் பிரச்சனை எற்பட்டது என்றால் 2022 ம் வருடம் 3வது மாதம் ஏற்பட்டது. பிரதிவாதி கடந்த 2022 ம் வருடத்திலிருந்து என்னிடம் பேசவே கிடையாது. அதன்பிறகு நானும் பிரதிவாதியும் சந்தித்து கொள்வது கிடையாது. தாவா சொத்திலுள்ள கொள்ளைக்குள் நான் செல்லும்பொழுது பிரச்சனை செய்து வருகிறார். பிரதிவாதி தாவா சொத்திற்குள் உள்ளே வரக்கூடாது என்று சொல்லி பிரச்சனை செய்து வருகிறாரா என்றால் சரிதான். எத்தனை முறை நான் உள்ளே போக முயற்சி செய்தேன் என்றால் 5 முறை நான் கொள்ளைக்குள் செல்ல முயற்சி செய்தபோது பிரதிவாதி வரவிடாமல் தடுத்தார். தாவா சொத்தை நான் கிரயம் செய்ததற்கு பின்னிட்டு பிரதிவாதி உள்ளே வரக்கூடாது என்று சொல்லி பிரச்சனை செய்து வருவதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது தாவா சொத்தை நான் கிரயம் பெற்றதாகவும் எனது பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்கு பின்னிட்டு நான் தாவா சொத்திற்குள் உள்ளே செல்ல விடாமல் தடுக்கிறார் என்று கூறி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் என்னால் போடப்பட்ட கொட்டகைக்குள் உள்ளே நுழைய விடாமல் பிரச்சனை செய்து வருகிறார். பிரதிவாதி அவரது சொத்து என்று சொல்லமிதான் என்னை கொள்ளைக்குள் நுழைய விடாமல் தடுத்துவவருகிறார். நான்

தாவா சொத்தை கிரையம் பெற்றலிருந்து பிரதிவாதி நுழைய விடாமல் தடுத்து வருகிறார். நான் தாவா சொத்திற்குள் போய் வந்துக்கொண்டு தான் இருக்கிறேன். நான் உண்மையான உரிமையாளரிடமிருந்து சொத்தை கிரையம் பெறவில்லை என்றாலும், பிரதிவாதி தான் உண்மையான உரிமையாளர் என்றாலும் சரியல்ல. மல்லிகா என்பவர் சீனிவாசன் என்பவரிடமிருந்து பட்டா மாற்றம் செய்துள்ள நிலையில் தற்போது சீனிவாசன் என்பவருக்கு சொந்தமானது அல்ல என்று மறுப்பதற்கு சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்னதாகவே உரிமை மூல பிரச்சனை இருந்து வந்ததால் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.27 17:46:26 +0530

District Munsif
Mannargudi.